REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 29 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
திනකරන්

வரு. 88 இல. 309 | December 29,Tuesday, 2020 | 16பக்கங்கள் | 30/-

## இராணுவ தளபதிக்கு பதவி உயர்வு



இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவினால் உடன் அமுலுக்கு வரும்வகையில் ஜெனரல் ஆக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதியிலுள்ள

## மாணவர்களுக்கு பிறிதொரு பாடசாலையில் கற்க வசதி



மாணவர் ஒருவரின் கல்வி கற்கும் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்காலிகமாக மற்றொரு பாடசாலையில் கல்வி கற்கும் வாய்ப்பை வழங்குவதில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

2021 ஜனவரி மாதம் 11ஆம் திகதி பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான தீர்மானத்தை அனைத்து விடயங்களையும் ஆராய்ந்த பின்னரே அரசாங்கம் எடுத்துள்ளதே தவிர, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அந்த தீர்மானத்தை எடுக்கவில்லையெனவும் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற 06

## ஜனாஸாக்களை அடக்கம் செய்ய இரண்டு இடங்கள் பரிந்துரை

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்காக இரண்டு இடங்களை பரிந்துரை செய்திருப்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பான அறிக்கை ஒன்று பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

இதன்படி மன்னார் மறிச்சுக்கட்டி மற்றும் கிழக்கு இறக்காமம் என இரண்டு பிரதேசங்கள் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன.

இதனிடையில் சுகாதார 06

## சமஷ்டி தீர்வு என சம்பந்தன் மீண்டும் தமிழரை ஏமாற்றுகிறார்

TULF செயலாளர் ஆனந்த சங்கரி குற்றச்சாட்டு



மாகாண சபைக்கான தேர்தல் நெருங்குவதால் தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்காக சம்பந்தன் சமஷ்டி என்ற வார்த்தையை பேச தொடங்கிவிட்டார். தற்போதும் சமஷ்டி தீர்வு தான் என்று கூறி, இரா.சம்பந்தன் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்ற ஆரம்பித்துவிட்டாரென தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 06

இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு புத்துயிரூட்டும் வகையில்

# உக்ரேனிலிருந் ... மாக
# உல்லாச பயணி ... கை




## 185 வெளிநாட்டவர்கள் இருவாரங்கள் தங்கியிருப்பர்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாக நிறுத்தப்பட்டிருந்த சுற்றுலாத்துறைக்கு மீள புத்துயிரூட்டும் வகையில் நேற்று முதல் மீண்டும் சர்வதேச உல்லாசப் பிரயாணிகளுக்காக விமான நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ் நேற்று முதற்கட்டமாக 185 வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர். அவர்கள் சுமார் இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கியிருப்பார்கள் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் உக்ரேனில் இருந்து 185ற்கு அதிகமான 06





## பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலின் 1100 வருட பூர்த்தி விழா இன்று

பேருவளை விஷேட நிருபர்



இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலின் 1100 06

## போதைப் பொருள் பாவித்தால் ஒரு வருடத்திற்கு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை



போதைப்பொருள் பயன்படுத்தியவர்களுக்கு ஒரு வருடத்திற்கு கனரக வாகன சாரதி உரிமம் வழங்கப்படாது என்று அமைச்சர் திலும் அமுனுகம கூறியுள்ளார்.

ஜனவரி 1 முதல் இந்த திட்டம் நடைமுறைக்கு வருமென்றார். கனரக வாகன சாரதி விண்ணப்பதாரர்கள் 06

## பிரபல சிங்கள பாடகர் ஷெல்டன் காலமானார்



பிரபல சிங்கள பாடகர் ஷெல்டன் முத்துனகே காலமாகியுள்ளார். இவர் தனது 73 ஆவது வயதில் காலமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் நீர்கொழும்பு வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்று

## நோயாளர் எண்ணிக்கை 41,054 ஆக அதிகரிப்பு

மேலும் 4 பேர் மரணம்; மொத்தம் 191

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை 41,054 ஆக அதிகரித்துள்ள நிலையில் மேலும் நான்கு வைரஸ் தொற்று நோயாளிகள் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அவர்கள் ராகம, வவுனியா, கடவத்தை, பிட்டகோட்டே பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் 06

கொரோனா தொற்றால் மரணிப்பவர்களின் தகன விவகாரம்;

## நிபுணர்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய நடக்க வேண்டியது அனைத்து பிரஜைகளினதும் கடமை

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா வைரஸ் தொற்றால் மரணிக்கும் நபர்களின் உடல்கள் சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் தீர்மானத்திற்கு அனைத்து தரப்பினரும் இணங்க வேண்டும் என இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



அந்த நிபுணர்கள் குழு வழங்கிய பரிந்துரைக்கு அமைய செயற்பட வேண்டியது அனைத்து பிரஜைகளினதும் கடமை 06

## சர்வதேச சுயாதீனமான விசாரணையிலேயே நீதி

TNA சாணக்கியன் எம்.பி



சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளும் போதே எமக்கு நீதிகிடைப்பது சாத்தியமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் 06

கொரோனா வைரஸ் மரணங்கள்;

## சடலங்களை எரிப்பதற்கு ஆதரவாக கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

லோரன்ஸ் செல்வநாயகம்



## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழில் போராட்டம்

கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கோரிக்கை

சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்தக் கோரியும், அவர்



## தங்கத்தின் விலையில் ஏற்பட்ட திடீர் மாற்றம்